அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...


ஆசிரியர் தலையங்கம் ................................. 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

போதனையா? இல்லை வேதனையா?......2

இல்லறம் இனிக்க.............................................3

மக்கள் சக்தி இயக்கம் ................................. 5

கவிதைகள். ....................................................... 6



சிந்தனை 8 செயல் 4 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம் மார்ச் 2026

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## தேவை தேர்தல் சீர்திருத்தம்.(சென்ற மாதத் தலையங்கம் தொடர்ச்சி}

ஊழலின் ஊற்றுக் கண்ணாக இருப்பது தற்போது உள்ள தேர்தல் நடைமுறைகளே என்பதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்காது என நம்புகிறோம். பணபலமே தேர்தல் வெற்றி, தோல்விகளைத் தீர்மானிக்கும் நிலையில், பணத்துக்கும் தேர்தல் நடைமுறைகளுக்கும் உள்ள நெருக்கத்தைக் களைவதன் மூலமே, அதற்கான சீர்திருத்தங்கள் மூலமே நாட்டில் ஜனநாயகத்தை உயிர்ப்புடன் விளங்கச் செய்ய முடியும்.

**செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள்**

1.மிகமிகக் குறைந்த செலவில் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்த வேண்டும். மத்திய பார்வையாளர்கள் என வருபவர்கள் என்ன சாதிக்கிறார்கள் என்பது புரியவில்லை. அவர்களுக்காக மக்களின் வரிப்பணம் செலவிடப்படுவது வீண்விரயமாகும். எனவே, அந்த நடைமுறை கைவிடப்பட வேண்டும்.

2.வாக்குகளைப் பெறுவதற்கு அரசியல் கட்சிகள் பணம் கொடுப்பது மட்டுமல்ல, மக்கள் பணம் பெறுவதும் தண்டனைக்குரிய குற்றம் என சட்டம் வேண்டும், சட்டம் செயல்பட வேண்டும்.

3.அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வரைமுறையின்றிச் செலவு செய்வது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும். அதற்கு ஒரே வழி - அரசு நிதியிலிருந்தே தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்கள் தங்களுக்கானத் தேர்தலைத் தாங்களே நடத்துவதற்குச் சமம் இது.

**எப்படி நடத்துவது?**

**அ)பொதுமேடை**

தொகுதிக்கு உட்பட்ட இடங்களில், நான்கு அல்லது ஐந்து இடங்களில் மாவட்ட நிருவாகம் பொதுமேடை ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர் அல்லது காவல்துறை கண்காணிப்பாளர் போன்ற உயர் அதிகாரிகள், மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் வேட்பாளர்கள், அந்தப் பொதுமேடையில் மட்டுமே பரப்புரை செய்ய வேண்டும். போட்டியிடும் வேட்பாளர்கள், தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், தாங்கள் சார்ந்துள்ள கட்சி அல்லது கூட்டணி, தொகுதியின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் என்ன செய்யும் என்பது குறித்துப் பேச வேண்டும். மாற்றுக் கட்சிகளின் கொள்கைகளைத் தாக்கிப் பேசலாமேயொழிய தனிநபர் தாக்குதல் அறவே இருக்கக் கூடாது. கூட்ட நடவடிக்கைகள் உள்ளூர் தொலைக்காட்சியில் நேரலையாக ஒளிபரப்ப வேண்டும். இதனால் வேட்பாளர் மற்றும் கட்சிகளின் நிலைப்பாட்டை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

**ஆ)கட்சித் தலைவர்கள்** ஊர் ஊராகச் சென்று ஆடம்பரச் செலவு செய்து, மக்களைப் பணம் கொடுத்து அழைத்துவந்து பெரிய, பெரியக் கூட்டம் நடத்தி, ஒரு மாயையை உருவாக்குவதும், உயிர்ப்பலி ஏற்படுத்துவதும் தடுக்கப்பட வேண்டும்.

தலைவர்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை ஊடகம் வாயிலாக வெளியிட வேண்டும். தங்கள் பரப்புரையை அரசு தொலைக்காட்சி ஒதுக்கும் நேரத்தில் மேற்கொள்ள வேண்டும்.

**இ)தேர்தல் ஆணையம்** கட்சிப் பாகுபாடு இன்றி சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்.

மாற்றம் ஒன்றே மாறாதது. ஒரு பண்பட்ட தேர்தல் நடைமுறைக்கு நாம் மாறியாக வேண்டும். வளர்ந்த நாடுகள் பல, தேர்தலில் நாகரிகத்தைக் கடைப்பிடிக்கின்றன.

நமது நாட்டிலும் அப்படிப்பட்ட ஒரு நாகரிக, தேர்தல் முறை பயன்பாட்டுக்கு வரும்பொழுதுதான் மக்களாட்சியின் மாண்பு நிலைநிறுத்தப்படும். மக்களும் குடியாட்சியின் முழுப்பயனைப் பெற்று முன்னேற முடியும். அந்தக்காலம் விரைவில் வரும் என நம்புவோம்!

........அன்புடன் ஆசிரியர்



## நெஞ்சமே அஞ்சாதே நீ! டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

"பாதுகாப்பு பாதுகாப்பு" என்று அலறாதீர்கள் என்கிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள். என்ன ஆகுமோ என்று பயப்படாமல் சற்று வேறுவிதமாகக் காரியங்களைச் செய்து பாருங்கள். வழக்கமாகச் செல்லும் பாதைக்குப் பதில் - காந்தி நகரில் "வாக்" போவதற்குப் பதில் சைதாப் பேட்டை மறைமலையடிகள் பாலத்தினடியில் இருக்கும் குடிசைப் பக்கம் ஒருநாள் நடந்து பாருங்கள். இப்படியெல்லாம் செய்யும்போது உலகமே வேறுவிதமாகத் தெரியும். வேறு நோக்குகள் நமக்குப் புலப்படும்.உலகத்தையும் வாழ்வையும் மேலும் நன்றாக ரசிக்க நம்மால் முடியும். மனித மனம் பயத்தால் அடிபட்டிருக்கும் வரை, பாதுகாப்பு பாதுகாப்பு என்று அதை எண்ணி அலறும் வரை, எந்தப் பெரிய காரியத்தையும் செய்ய முடியாது.

செக்குமாடு போல் ஒரே வாழ்க்கையைச் சுற்றிச் சுற்றிவர முயலாது நாம் புதிய அனுபவங்களை வரவேற்றுக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தில் படித்த பாரிஸ்டரான காந்தி ஆங்கில உடையணிந்து பழகியவர், - வெறும் அரைத்துண்டு கட்டி உலவி வந்ததை எண்ணிப் பாருங்கள். அமெரிக்காவில் சுகமாக வாழ்ந்த டாக்டர் சுவைஸ்டர், ஆப்ரிக்காவில் குடியேறி மருத்துவமனை திறந்து தொண்டாற்றியதைக் கொஞ்சம் கற்பனையில் உலவவிடுங்கள்.



கவனத்துடன் இருப்பது வேறு, வழக்கத்துக்கு மாறாகக் காரியங்களைச் செய்ய பயப்படுவது வேறு. பழக்கம், வழக்கம், பயம், பாதுகாப்பு போன்ற வார்த்தைகளை சமாதானமாக உபயோகித்து நம் வாழ்க்கையை முடக்கிக் கொள்ளக் கூடாது. சாதிக்க விரும்புபவர்கள் பாதுகாப்பு, பயம் போன்ற எண்ணங்களை விட்டொழி யுங்கள்!

## போதனையா? இல்லை வேதனையா?.. முனைவர்.லெ.பாஸ்கர்

போதனைகளில் சிறந்த போதனை - சுயஅனுபவத்தால் கிடைக்கும் அனுபவ போதனைதான் அதுவே நம்வாழ்வை உயர்த்தும். புத்தன் சொல்லாதப் போதனைகள் - இயேசு செய்யாத சொற்பொழிவுகள் - நபிகள் உதிர்க்காதப் பொன்மொழிகள் - வள்ளலார் உரைக்காத அறநெறிகள் மார்க்ஸ் கூறாத தத்துவங்கள் - காந்தியடிகள் காட்டாத அகிம்சை - அம்பேத்கர் அறிவுறுத்தாத சகோதரத்துவம் - பெரியார் புகட்டாத சமத்துவம் - உன் ஆசான் கூறாத அறிவுரை - உன் தாய், தந்தை எடுத்துக்காட்டாத அனுபவ மொழிகள், இவற்றையெல்லாம் தாண்டி எதைச் சொல்லப் போகிறார்கள்? அல்லது செய்யப் போகிறார்கள்? இந்த அரிதாரம் பூசிய நடிகர்கள்! ஏன் நண்பா! அங்கே கூட்டம்? ஏனிந்த மயக்கம்? அவர்கள் உன் வீட்டுக்காக அல்லது இந்த நாட்டுக்காக எதைச் செய்தார்கள்? அல்லது செய்யப் போகிறார்கள்?

நண்பனே! இளைஞனே! உனக்காக வேதனைப்படுகின்றோம். கலையும், சினிமாவும் வாழ்க்கையின் ஓர் அங்கமேயன்றி அதுவே வாழ்க்கையல்ல! சினிமாவை, சினிமாவாகப் பார். பொழுதுபோக்கு என்பது வேறு, வாழ்க்கையின் குறிக்கோள் என்பது வேறு. சினிமா மோகத்தில் மூழ்கி கற்பனை உலகில் வாழாதே! நடிகர்களுக்காக உன் கைப்பொருளை இழக்காதே! உன் திறமைகளை, நற்பண்புகளை வளர்த்து, பொருளாதாரத்தை மேம்படுத்தி வாழ்க்கையில் முன்னேறுகின்ற வழியைப் பார்! உன் வளர்ச்சி, உன் குடும்பத்தின் வளர்ச்சிதான் உண்மையான, நிரந்தரமான மகிழ்ச்சி! புரிந்து கொள் இதுவும் போதனைதான்! புரியாவிட்டால் மிஞ்சுவது வேதனைதான்!

.

சென்ற இதழ் தொடர்ச்சி....

## 1.அறிவைத் தள்ளிவையுங்கள்.

தமிழறிஞர் டாக்டர். மு.வரதராசனார் அவர்கள், கள்ளோ? காவியமோ? என்றொரு நாவல் எழுதினார். அந்தக் காலத்தில் மிகவும் புகழ்பெற்ற நாவல். 1960- 70 களில் பல திருமணங்களில் மணமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட அருமையான நூல் அது.

அந்த நாவலின் கதாநாயகன் படித்த பட்டதாரி; கல்லூரிப் பேராசிரியர். தன் வீட்டில் பணிப்பெண்ணாக வேலைக்குச் சேர்ந்த படிக்காதப் பெண்ணை விரும்பி திருமணம் செய்து கொள்கிறான். இருவரும் அன்பால் உள்ளம் கலந்து வாழ்கிறார்கள். இருப்பினும் சில ஆண்டுகள் கழித்து அவர்களிடையே பிணக்கு ஏற்பட்டு விடுகிறது. அவனுக்கோ, தான் படித்தவன் அவளோ என்ன இருந்தாலும் ஒரு வேலைக்காரிதானே என்ற அகந்தை உண்டாகிவிட, அறிவின் மயக்கத்தில் அன்புள்ளம் வெளிப்படாமல் போய்விடுகிறது. பிணக்கு பிரிவில் முடிந்து விடுகிறது

கணவன் மனைவிக்கிடையே பிணக்கு ஏற்படும்போது அறிவைத் தொலைவில் வைத்துவிட வேண்டும் அன்புடனே அதை அணுக வேண்டும் என்பதே அந்நாவலின் மையக்கருத்து.

புறவாழ்க்கைக்கு அதாவது இல்வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட சமூக வாழ்க்கைக்கு அறிவு இன்றியமையாதது என்றால், அகவாழ்க்கைக்கு அதாவது இல்லறத்துக்கு அன்பு இன்றியமை யாதது. மூளை - சிந்தனையின் வெளிப்பாடு அறிவு என்று வைத்துக் கொண்டால், நெஞ்சின் - உணர்வின் வெளிப்பாடு அன்பு!

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே....

என்று குறுந்தொகை பாடல் கூறுகின்றதேயொழிய அறிவுடை நெஞ்சம் தாம் கலந்தனவே என்று கூறவில்லை.

கணவன் மனைவிக்கிடையே அறிவு என்னும் நெருப்பு தலைதூக்கும்போது அதை அன்பு என்னும் தண்ணீரால் அணைத்துவிட வேண்டும்.

பிறரை அடக்கி வென்றால்தான் வாழமுடியும் என்பது, புறவாழ்க்கைக்கு வேண்டுமானால் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால், இல்லற வாழ்க்கையில் அடங்கித் தோற்றுவிடுவதே நன்மை பயக்கும். அது அடிமைத்தனம் ஆகாது.

எதையும் அறிவு கொண்டு நுணுக்கி, நுணுக்கி ஆய்ந்துப் பார்ப்பதால், இல்வாழ்க்கையில் நிறைகளைவிட, குறைகளே தென்படுகின்றன;குற்றம் காணவே உள்ளம் முனைகிறது. ஆனால் அன்புள்ளத்தில் அருள் சுரக்கிறது; அமைதி பிறக்கிறது; இல்லறம் சிறக்கிறது.

எனவே, கணவன் - மனைவி உறவில் அறிவைத் தள்ளி வைத்துவிட்டு அன்புக்கு இடம் கொடுப்போம்! .........தொடர்ந்து இல்லறம் இனிக்கும்.

**தமிழ் அறம் மின்னிதழ்**
**வெளியிடுபவர் : மருத்துவர்.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.**

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
# கலித்தொகை -- முல்லைக்கலி

காதல் வயப்பட்ட ஆயமகனும், ஆயமகளும் சந்தித்தபோது அவர்களுக்கிடையே நடைபெற்ற உரையாடலை நயம்பட எடுத்துரைக்கிறது முல்லைக்கலி. இருவரின் உள்ளங்களில் காதல் உணர்வு ததும்பினாலும் அதை வெளிக்காட்டாமல், விட்டுக்கொடுக்காமல் இருவரும் சுவை பட பேசுகின்ற அழகே தனிதான்.

ஆயமகள், ஆயமகனைப் பார்த்துச் சொல்கின்றாள், "பக்கத்தில் உள்ள தோட்டத்துக்கு கன்றோடு செல்கின்றேன். என் தாம்புக் கயிற்றின் ஒருமுனையைப் பற்றியதோடு என் முன்னே வந்து நின்று தடுத்தும் நிறுத்துகின்றாயே!. உனக்கு என்ன பித்துப் பிடித்து விட்டதோ? என்கின்றாள்.

**பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம், எம்**
**தாம்பின் ஒரு தலை பற்றினை, ஈங்கு எம்மை**
**முன்னை நின்றாங்கே விலக்கிய எல்லா! நீ**
**என்னை ஏமுற்றாய்?.........** என்று பொய்யாகக் கோபித்துக் கொள்ள,

ஆயமகனோ அவளின் பொய்யானக் கோபத்தை மேலும் கண்டுக் களிக்க இவ்வாறு கூறுகிறான். "வழியை விடமாட்டேன். தன்னைப் பிடிக்க வருவாரைக் கீழே தள்ளிவிட்டு, எகிறி ஓடும் எருமைக் கன்றைப் போல வீட்டைவிட்டு வெளியில் வந்துள்ள நீ என்னையும் பிடித்துத் தள்ளிவிட்டு உன் வழியில் போகலாமே? " என்கிறான்.

**விடேன், தொடீஇய செல்வார்த் துமித்து, எதிர் மண்டும்**
**சுடு வய நாகு போல் நோக்கி, தொழுவாயில்**
**நீங்கி, சினவுவாய் மற்று...........** என்று சொல்லி சிரிக்க,

அவளோ, "வழியை விட்டு விலகி நில்லடா! தன் கன்றைப் பிடிப்பவர் மீது சினத்துடன் பாய்ந்து செல்லும் தலையீற்றுப் பசுவைப் போல, உன்னை ஒறுப்பதற்கு என் தாயாரும் இங்கே வந்து விடுவாள். **நீ நீங்கு, கன்று சேர்ந்தார்கண் கத ஈற்றாச் சென்றாங்கு வன்கண்ணள் ஆய் வரல் ஓம்பு"** என்று செல்லமாக அச்சுறுத்த, ஆயமகனோ மசியவில்லை. அவன் சொல்கிறான், தாய் வந்தாலும் வரட்டும், பிறர் எவர் வரினும் வரட்டும் அரசனே வரினும் வரட்டும், உன் அன்பு கிடைக்குமானால், நான் எவர் வந்தாலும் அஞ்ச மாட்டேன். என்று வழிவிடாமல் நிற்கிறான்.

அதைக் கேட்டு ஆயமகள் சொல்கிறாள்,
**கனை பெயல் ஏற்றின் தலை சாய்த்து, எனையதூஉம்**
**மாறு எதிர் கூறி, மயக்குப் படுகுவாய்.** பெருமழை பெய்யும்போது, அசையாமல் தலை சாய்த்து நிற்கின்ற ஏறுபோல, அப்படியே நிற்கின்றாயே! என்ன சொன்னாலும், காம மயக்கத்திலே ஆழ்ந்துவிடுகிறாயே! என்று நாணுகிறாள்........ உவமையழகு தொடரும்.

# மக்கள் சக்தி இயக்கம்
# வாக்காளர் விழிப்புணர்வு பரப்புரை

**பண்புள்ள வாக்காளப் பெருமக்களே!**

- **தேர்தல், அரசியல் கட்சிகளுக்கானது மட்டுமல்ல; மக்களாகிய நாம்தான் தேர்தல் மூலம் ஆட்சியமைக்கின்றோம்.**
- **மன்னராட்சியில் நல்லாட்சிக்கு மன்னர் பொறுப்பு, மக்களாட்சியில் நல்லாட்சிக்கு மக்கள்தானே பொறுப்பு?**
- **மக்களின் சிந்தனைகள் சீரானதாக இருந்தால், அமைகின்ற ஆட்சி நேரானதாக இருக்கும்.**
- **வாக்களிக்க வேண்டுமென்ற அக்கறை உங்களுக்கு இல்லையென்றால் கட்சிகளுக்கு உங்கள் மேல் அக்கறை இல்லாமல் போய்விடும்.**
- **வாக்குச் சாவடியில் நீங்கள் எடுத்துவைக்கும் காலடி நல்லாட்சி அமைவதற்கான முதல்படி!**
- **வாக்களிப்பது நமது குடியாட்சிக் கடமை! பாடுபட்டு பெற்ற உரிமை!. அதை வீணாக்காதீர்கள்!. தகுதியானவரைத் தேர்ந்தெடுக்க உங்கள் வாக்கைப் பயன்படுத்துங்கள்!**
- **எனது ஒரு வாக்கு என்ன மாற்றத்தை ஏற்படுத்தும் என எண்ணாதீர்கள்!. ஒரு வாக்கில் ஆட்சி கவிழ்ந்த கதை நமக்குத் தெரியும்.**
- **எனது வாக்கு விற்பனைக்கு அல்ல! அது என் உரிமை! என்ற பெருமிதத்தோடு, காசு, பணம் எதிர்பார்க்காமல் கண்ணியத்துடன் வாக்களிப்போம்!**

| | | |
|---|---|---|
| மரு.த.இராசலிங்கம்<br>தலைவர். தூத்துக்குடி | முனைவர்.லெ.பாஸ்கர்<br>பொதுச்செயலாளர். தஞ்சை | கே.சி.நீலமேகம்<br>பொருளாளர்.திருச்சி |
| துணைத்தலைவர்கள் | முனைவர்.க.பெரியசாமி<br>பெரம்பலூர் | வழக்கறிஞர்.அ.அசோகன்<br>மதுரை |
| துணைச்செயலாளர்கள் | மு.சுகுமார்<br>கரூர் | இரா.இளங்கோ<br>திருச்சி |

# தர்மமே சாட்சி!

பையில்
நிரம்பியது
போதாதென்றே...

பொல்லாங்கு
நரிகள்
பேசும்!

கைகளை
வாளால்
வீசும்!

கணக்கின்றி
கூறுகள்
போடும்!

பொய்யில்
பொழிந்து
கீறிடும்!

அலங்கரித்து
இசை
பாடும்!

தீயில்
பொசுங்கும்
சத்தியத்திற்கு...

தர்மத்தாய்
சாட்சி
கூறும்!

கவிஞர்.கலியுகன் கோபி
சென்னை

# என்ன தவம் செய்தேனோ!

பொன்மாலை பொலிந்தாட,
மண்மகள் இசைந்தாட,
முன்நினைவு அசைபோட,
கண்ணிரண்டு கவிபாட

காலை புலர்ந்தால்
சோலை நுழைந்தால்,
மாலைவரை மலர்ச்சி
வேலை மனநெகிழ்ச்சி!

எண்ணம் கொள்ளையிடும்
வண்ணவண்ண மலர்கள்,
துள்ளித்திரியும் மான்கள்,
குதித்தோடும் முயல்கள்!

பற்றிப்படர்க் கொடியாய்
சுற்றிவந்து வட்டமிடும்
சிறகடிக்கும் பறவைகள்
மறக்குமா ஆனந்தம்!

ஒத்தையடிப் பாதையில்
ஓடியாடிப் பயணித்து
கையில் கோலின்றி
கருணைக் குறைவின்றி

மாணவர்கள் முன்னேற
மனதார வாழ்த்துரைத்து
சிகரம் தொட்டிடவே
ஓங்காரம் எழுப்பினேன்.

ஏற்றிவிடும் ஏணியாக
எரிந்தொழுகும் மெழுகாக
கரைந்து கனிந்து
அடைந்தேன் ஆனந்தம்
ஆசிரியப் பணியிலே!

கைகாட்டி மரமாக
ஒளிகாட்டும் விளக்காக
அவனியில் விளங்கிடவே
என்ன தவம் செய்தேனோ!

கவிஞர்.ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி